
**Earth-Trekker's Guide** *Carry The Light In Nepal* series
*Is A New Dark Age To Be Evaded?* Booklet 1 (Tamil)
Global Truth For 21st Century Nepal's Harsh Reality





**Two Backpackers Carry On...**

# The Muktinath Trek

In The Old Kingdom Of Nepal

## தெய்வீக நோக்கத்தை கண்டுபிடிக்க
# அற்புத அக்கினியின் ஆலயம்

*Find Your Divine Destiny In...*

# The Temple Of Miraculous Fire

© Copyright 2005, 2011, 2018 by Roddy Kenneth Street, Jr.

Tamil translation (2018) made by Pastor Paul Phinehas
of Pollachi, Tamil Nadu, South India

JesusChristNepal.org மேலும் அறிய
இன்னும் பல மின்புத்தகங்கள் , அச்சு வடிவங்கள்
JesusChristNepal.com, JesusChristSriLanka.com, JesusChristBurma.com
JesusChristIndia.org, JesusChristChina.org, JesusChristKorea.org மற்றும்
JesusChristSouthIndia.com, JesusChristSouthKorea.com
இலவச வேத பாட நூல் கிடைக்கும்

*Muktinath's "Temple of Miraculous Fire" (in 1979) at bottom right corner.*

**முக்திநாத்** என்ற "தெய்வீக அக்கினியின் அற்புத ஆலயம்." (1979) கீழே வலது பக்கம்



**நேபாள்** தேசத்தின் உயர்ந்த மலை சிகரத்தில் **முக்தி நாத்** என்ற புனித ஸ்தலம் உள்ளது. **முக்திநாத்** என்ற இடத்தின் அர்த்தம் **"இரட்சண்ய தேவன்.**" அநேக இந்து மற்றும் புத்த மத புனித யாத்திரை குழுவினர். இங்குள்ள **"அற்புத அக்கினியின் ஆலயத்தை"** தரிசிக்க செல்வது வழக்கம்.

உண்மையான **"இரட்சண்ய தேவனையும்**" அற்புத அக்கினியின் இரகசியத்தையும் அறியாமல் புனித யாத்திரையில் மேற்கூறிய நிகழ்வுகளை காண துடிப்பது வினோதமாக உள்ளது.

நேபாள் தேசத்தில் 1979 ஆம் ஆண்டு இரண்டு மாதங்கள் தங்கினேன். **சுவிட்சர்லாந்து** சாதனையாளர் நண்பர் **வெர்னர் பௌவ்கார்ட்னர்** உடன் இணைந்து. நவம்பர் மாதத்தில் **பொக்கரா முக்திநாத்** மலையேறும் பயிற்சியில் ஈடுபட்டேன், அதே டிசம்பர் மாதம் **எவரெஸ்ட்** சிகரத்தில் மலையேறும் பயிற்சியில் இணைந்து ஈடுபட்டோம்.

முதல் முறையாக மலையேறும் பயிற்சியில் நேபாளத்தில் உள்ள உயர்ந்த மலை சிகரங்களில் தான் ஈடுபட்டோம். பலமுறை முயற்சிக்கு பின், எங்கள் இலக்காகிய **முக்திநாத்** என்ற இடத்தை அடைந்தோம்.

இங்கு தான் எங்கள் பயிற்சியின் நோக்கத்தை அறிய முடிந்தது... இந்த இடத்தின் பெயர் "தெய்வீக அக்கினியின் அற்புத ஆலயம்." இந்த இடம் மலை உச்சியின் மேல் பழைமை வாய்நத கட்டிடத்தில் அமைந்துள்ளது.

அநேக வழிகளில் இங்கு செல்வது தெய்வீக உணர்வுகளை உணர தூண்டும். இங்கு உள்ள ஆலயத்தில் காணப்படும் தெய்வீக அக்கினி தான் சற்று ஏமாற்றத்தை நமக்கு தருகிறது. புத்த மத பிட்சு (சாமியார்) ஆலய திரை சீலையை இழுத்தவுடன், நேபாள ஆலயத்தினுள் காணப்படும் அற்புத காட்சியை காண எங்களுக்கு தருணம் கிடைத்தது.

அதற்கு பின்பு, தெய்வீக அக்கினியின் ஆலய செயல்பாடுகளை காண முடிந்தது. ஆலய தரை (பூமி) யிலிருந்து சிறிய நீரூற்று தோன்றி ஆலய திரை சீலைக்கு பின்பிருந்து, நீர் அருவியாக வலம் வருகிறது. நீரூற்றுக்கு அருகில் பூமியிலிருந்து இயற்கை வாயு கசியும் இடத்தில் புத்த மத பிட்சுகள் ஒளியேற்றுகின்றனர்... புத்த பிட்சுகள் ஒளியேற்றுவதால் நீர் அருவியல் அக்கினி பிழம்புகள் மிதந்து எரிந்து கொண்டே உள்ளது. நித்திய அணையா விளக்கு போன்ற தோற்றத்தை இது தருகிறது. இது தான் இந்த ஆலயத்தின் அற்புதம், உலகத்தின் முக்கிய நான்கு கூறுகளாகிய நீர், நெருப்பு, நிலம், காற்று, ஆகியவைகள் இணைத்து ஏற்படுத்தும் இந்த அற்புத அதிசயத்தை காண இந்து மற்றும் புத்த மத பக்தர்கள் ஆலயத்திற்கு வந்த வண்ணமே உள்ளனர்.

நீங்கள் மனதில் நினைப்பது போன்று, மலையேறும் பயிற்சியில் ஈடுபடுவர்களுக்கு மிதக்கும் தண்ணீரில் நெருப்பு எரிந்து கொண்டிருப்பது, நீங்கள் கற்பனை செய்வது போல் அதிசய அற்புதம் ஒன்றும் இல்லை.

ஆறு மாதங்களுக்கு பின்பு பசிபிக் தீவிலுள்ள குவாம் (Guam) என்ற இடத்தில் வசிப்பதற்கு சென்றேன். இந்த இடத்தில் சென்றவுடன், இயசேு கிறிஸ்துவின் உண்மையான விசுவாசியாக மாறி, வேதாகமத்தின் மீது அதிக பக்திவைராக்கியமுள்ள மாணவனாக மாறினேன். எனது

குவாமின் வருகை புதிய மாற்றத்தை என் வாழ்வில் தந்தது. பரிசுத்த ஆவியானவர் மனிதனில் வாசம் செய்யும் பொழுது அற்புத அக்கினியின் மகிமை உண்மை என உணர்ந்தேன். இந்த நிலையை கடந்தவுடன் மனிதன், தேவனின் பரிசுத்த ஆவி வாசம் செய்யும் ஆலயமாக மாறுகிறான். மனிதன் "தெய்வீக அக்கினியின் அற்புத ஆலயமாக" மாறுவானெனில் பரிசுத்த ஆவியானவரின் அக்கினி நம்முடைய தீய சக்திகளை நித்தியமாய் அழிக்கும் என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையே!

இயேசு கிறிஸ்து உங்களுக்கு தாகம் உண்டாகாத "ஜீவதண்ணீரை" "நித்திய ஜீவநீரூற்றாக" பரிபூரணமாக தந்திருப்பது மிகையன்றோ!

பூமியிலுள்ள கிறிஸ்துவ விசுவாசிகள் யாவரும் கிழக்கு நோக்கி புனித பயணம் செய்து கொண்டிருக்கிறோம்... மலையேறும் பயிற்சியாகிய புதிய ஆரம்பம் மற்றும் புதிய பூமியை நோக்கிய பயணம் இனிதே தொடரட்டும். எங்களோடு கூட நீங்களும் இணைந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

நமது சேனை அனுதினமும் வளர்கிறது. புதிய நியமனங்களை எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம். அது மிகவும் நன்று. இச்செயலை தான் இயேசு நம்மிடம் எதிர்பார்கிறார் **ரிச்சர்டு வும்பிராண்ட்** (Richard Wurmbrand) தன்னுடைய புத்தகமாகிய **உன்னதத்தை அடைதல்** (Reaching Towards The Heights) என்ற புத்தகத்தில் சொன்னது போல் "பெரிய இயக்கமாக, ஒன்றிணைந்து செயல்பட்டால் வெற்றியை சுலபமாக அடையலாம்."

1980 ஆம் ஆண்டு கிறிஸ்துவ விசுவாசியாக மாறினேன். **குவாம்** தீவில் குடியமர்ந்தவுடன், எனக்கு தெரியாமல் இதே ஆண்டு எனது **சுவிட்சர்லாந்து** நண்பர் **வெர்னர் (Werner)** சுயாதீன முறையில் கிறிஸ்துவின் விசுவாசியாக மாறியதை கேள்விப்பட்டேன்.

எனது மலையேறும் பயிற்சியின் நண்பர் **வெர்னர் (Werner)** ஏற்கனவே **சுவிட்சர்லாந்திலுள்ள ஆல்ப்ஸ்** மற்றும் **இமயமலையை** ஏறி சாதனை படைத்தவர், **சுவிட்சர்லாந்தில்**

நிலையாக குடியமா்வதற்கு முன்பு ஒரு முக்கிய மலை சிகரத்தை ஏற விரும்பினாா். இறுதியாக எகிப்து சென்று **சீனாய் மலை** மீது ஏற தீா்மானித்தாா். அநேக கிறிஸ்தவ விசுவாசிகள் நினைப்பது போன்று, இந்த மலையில் தான் **மோசே** தேவனின் பத்து கட்டளைகளை பெற்றாா். இந்த பரிசுத்த பா்வதத்தில் **மோசே** பாா்த்தது அற்புத அக்கினி எரிகின்ற புதரிலிருந்து தேவ சத்தம் கேட்பது – **மோசே** தேவனிடமிருந்து பத்து கட்டளைகளை இந்த மலை உச்சியில் தான் பெற்றாா்.

**வொ்னா் (Werner) சீனாய் மலை** உச்சியை அடைந்தவுடன், தன்னுடன் எடுத்து சென்ற வேதாகமத்தை (Bible) எடுத்து, அமா்ந்து படிக்க ஆரம்பித்தாா். **வொ்னா்** தேவ வசனங்களை படித்து, தேவனை நோக்கி ஜெபித்து கொண்டிருக்கும்பொழுது, தேவனின் பரிசுத்த ஆவியினால் மறுரூபமாக்கப்பட்டாா். இயேசு கிறிஸ்துவின் மெய் விசுவாசியாக மாறினாா்.

சீனாய் மலையை விட்டு இறங்கியவுடன், எனது நண்பா் **வொ்னா் (Werner)** தேவினின் **பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாகிய அற்புத அக்கனியாக மாறினாா்**, கற்பனை செய்து பாா்க்கக் கூட முடியாத அற்புத நிலை.

**சுவிட்சா்லாந்திலுள்ள** வேதாகம கல்லூரியில் இறையியல் படித்ததை அவருடைய கடிதத்தின் மூலம் அறிந்தேன். எனது பழைய மலையேறும் பயிற்சி நண்பா், **சுவிட்சா்லாந்திலிருந்து** வந்து இனிமையாக பழகியவா், உலகின் பல பகுதிகளுக்கு என்னுடன் களைப்பில்லாமல் பயணம் செய்தவா். தற்பொழுது இந்த மனிதா் **சுவிட்சா்லாந்திலுள்ள சீா்திருத்த சுயாதீன சபை (Reformed Free Church)** ல் சுவிசேஷ மேய்ப்பராக உள்ளாா். தனது சொந்த நாட்டில் மிஷனரியாகவும், திருச்சபை நிறுவுதல் பணியையும் மேய்ப்பா் ஊழியத்துடன் இணைந்து செய்து வருகிறாா்.

எங்களது மலையேறும் பயிற்சியில் சாதனைகளை முடித்தவுடன் விசுவாசியாக மாறி, கிறிஸ்துவை

பின்பற்றுபவர்களாக மாறியது அதிசயம். நாங்கள் இருவரும் உலகின் பல பகுதிகளுக்கு ஒன்றாக பயணம் செய்துள்ளோம். பூமியில் தேவ குமாரனின் சேவை எவ்வளவு முக்கியம் என்று எங்களுக்குத் தெரியும்.

தேவனுடைய கிருபையாலும், தேவ குமாரனின் வல்லமையாலும், **நானும்,** எனது **நண்பர் வெர்னரும்** ஜீவனுள்ள ஆலயமாக, தேவனின் பரிசுத்த ஆவியானவருடைய தெய்வீக அக்கினி எங்களுக்குள் வாசம் செய்ய அனுமதித்தோதம். இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலம் மறுரூபமாக்கப்பட்டோம். அவரே மெய்யான தேவகுமாரன்.

தேவனுடைய மெய்யான நுழைவாயிலாக இயேசு கிறிஸ்து இருந்ததின் நிமித்தம் உண்மை விசுவாசியாக மாறினேன். தேவனின் சத்தியங்கள் அனைத்திற்கும் காப்பாளர் அவரே, தேவ சத்தியத்தின் அறிவிப்பாளரும் அவரே! அவர் முகத்தை பார்த்ததால், பரலோகத்தல் வீற்றிருக்கிற தேவனின் முகத்தை பார்க்க முடியும். அவருடைய வார்த்தைகளுக்கு செவி கொடுக்கும் பொழுது, பரலோகம் மற்றும் பூமிக்குறிய சத்தியங்களை தெளிவாக கேட்க முடியும். இயேசு கிறிஸ்துவின் சத்தம் தேவ சத்தம். அவர் நீதியிலும், பரிசுத்தத்திலும் நிறைந்துள்ளார். அவர் நித்திய தேவ குமாரனாயிருக்கிறார்.

தேடுவோரின் இறுதி இலக்கு, சத்தியத்தின் பரிசுத்த பிதா மற்றும் மெய்ஞானம் கொடுப்பவர் இயேசு. அவரே உன் வாழ்வின் முக்கிய இலக்கு, கிழக்கு நோக்கி புனித பயணம் செய்வோரின் இறுதி மனித இலக்கு புதிய ஆரம்பத்தின் மூலக் கூறு... பூமியையும், அதை சார்ந்துள்ளவைகளின் மீது புதிய ஆரம்பத்தை தருபவரும் இயேசுவே.

சாத்தானுக்கு அநேக குழந்தைகள் உள்ளனர், அவர்களில் சிலரை பரலோகத்திலிருக்கிற பிதா தமக்கென பயன்படுத்துவார். நீங்கள் தேவனுடைய குழந்தையாக மாறினால், தேவ குடும்பத்தின் அங்கத்தினர் என பெருமையுடன் அறிவிக்கலாம்... இயேசு கிறிஸ்துவின் சகோதரர் என்னும் அந்தஸ்தையும் பெறலாம்!

நீங்கள் வாழ்கின்ற உலகத்தில் காணப்படும் சகல வித குழப்பங்களிலிருந்தும், நீங்கள் எடுக்கும் சகல முயற்சிகளையும் தேவன் ஆசிர்வதிப்பார்.

அவருடைய கிருபை, மன்னிப்பு, தெய்விக நிலை அடைதல் உங்களை ஆசீர்வதிப்பதாக!

# நீங்களும் அற்புத **அக்கினியின்** ஆலயமாகலாம் !

# இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவர் கொடுக்கும் ஜீவத் தண்ணீரை பெற ஆயத்தமா?

# மறுபடியும் பிறப்பதின் மூலம் இவ்வனுபவத்தை பெறமுடியும்

வாழ்க்கையின் மூல ஆதாரம் கங்கை நதியில்லை. வாழ்வில் மெய்மூல ஆதாரம் இயேசு கிறிஸ்துவிடம் உண்டு, தேவனோடு இருக்கும் நித்திய ஜீவனை யாரால் தரமுடியும்.[1]

இயேசு கிறிஸ்து அறிவித்தது யாதெனில், “ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்.”[2] அவர் தேவனோடு இருக்கும் ஐக்கியத்தை வலியுறுத்தி கொண்டேயிருந்தார், “நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்

."[3] என்றார். தேவனின் இயற்கையை அறிய விரும்பினால் இயேசுவின் திருமுகத்தை முதலில் படிக்க வேண்டும். பிதாவின் கிருபையை மனிதருக்கு வெளிப்படுத்துபவர் அவரே.[4]

அதற்கு இயேசு "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்."[5] என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். [6]

இயேசுவே வானத்தின் வாசல். சர்வ வல்லமையுள்ள தேவ பிரசன்னதிற்கு மனிதர்களை அழைத்துச் செல்லும் வாசல், பரலோகத்தல் இருக்கிற பிதா அவரே. தேவ சமூகத்திற்கு வழி நடத்தும் நுழைவு வாயில் அவரே, தேவனின் பரிசுத்த ஆவியை பெற வழி நடத்துபவரும் அவரே.

இயேசு கிறிஸ்துவே உலகின் மெய் சத்தியம். அவரே உலகின் ஒளியாயிருக்கிறார். அவர் நம்மை தேவனிடத்தில் அழைத்து செல்கிறார். பிதாவின் சித்தத்தை பிரதிபலிக்கிற உன்னத பாதையில் அழைத்து செல்கிறார்.

இயேசு ஒருவரே வழி, பிதாவை அடைய வேறு வழியேதுமில்லை என்கிறார். மனித இன இரட்சிப்பிற்காக பூமியில் அவதரித்த பரிசுத்த தெய்வீக நபரை, உலகின் கோடிக் கணக்கனோர் அடையாளம் கண்டு பிடித்து விட்டனர்.

பூமியிலுள்ளோர் வாழ்நாள் முழுவதும், சத்தியத்தைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்துவின் சத்தியத்தை கேள்விப்பட்டுவிட்டீர்கள், உலகின் ஒளியை காணும் வழியை காட்டி விட்டோம்.

இயேசு உலகின் ஒளி, அவர் உங்களை சுற்றியுள்ள உலகத்தின் இருள் மற்றும் தீமையினின்று விலக்கி ஒளியை தருவார், நடகக் வேண்டிய சரியான பாதையை காட்டுவார். அவர் உங்களுடைய கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறார். அவர் தெய்வீக தன்மையுடையவர், அவரே சத்தியம் அவரே தேவனுடைய வார்த்தை.

உங்களுடைய இருதயத்தில் தேவனுடைய சத்தியத்தை எப்படி பெறுவீர்கள்? பிதாவாகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி பார்க்கும்பொழுது பரிசுத்த ஆவியானவரை உங்களுக்குள் அனுப்பி, பரிசுத்த வேத வசனங்களை புரிந்து கொள்ள அருள் புரிவார். அப்பொழுது தேவனின் பரிசுத்த நித்திய குமாரனாகிய இயேசுவை காண்பீர்கள்.

தேவனின் நித்திய வாழ்வை இயேசு கிறிஸ்துவின் மூலம் பெற்று விட்டீர்கள். அவர் உலகை உருவாக்கிய திரித்துவ தேவனின் ஓர் அங்கம், அவர் உங்கள் இருதயத்தின் மையப் பகுதியில் வீற்றிருக்கிறார். உங்களிடத்தில் மதிப்பையும், நற்குணத்தையும் எதிர்பார்க்கிறார். இவரே தேவகுமாரன். பூமியில் மாமிசத்தில் பிறந்து, பாவமில்லாமல், நீதியுடன் வாழ்ந்தவர் இவரே. எனினும் உங்களுக்காக சிலுவையில் தன்னையே தியாகம் செய்தார், நம்முடைய பாவங்களை அவர் சுமந்து கொண்டார்...

யாரெல்லாம் அவரின் இரட்சிப்பை பெற விரும்புகிறார்களோ, அவர்களுககு பாவத்திலிருந்து மீட்பு உண்டாகும்.

இதை நீங்கள் பின்பற்றும்பொழுது, உலகிற்கு தேவன் வைத்திருக்கிற சமாதானம் மற்றும் புதிய நித்திய நம்பிக்கை கிடைக்கும்... இவ்வுலகில் உங்களை ஆளுகை செய்ய தேவனுக்கு உங்கள் வாழ்வையும்.. ஜீவனையும் ஒப்படைத்து விட்டீர்கள்.

இவைகளையெல்லாம் உண்மையான சிறு ஜெபத்தால் நடைபெறுகிறது—உங்களுடைய சொந்த வார்த்தையால் ஜெபத்தை ஏறெடுக்க வேண்டும். விடுதலை மற்றும் தேவ தலைமைத்துவத்திற்கான ஜெபம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வரவேண்டும்!.

உங்களுக்குள் இருக்க வேண்டிய சில முக்கிய கோட்பாடுகள்.

1. கடந்த காலத்தில் நிகழ்ந்த தவறுகள் மற்றும் தீய வழிகளிலிருந்தும் மனம் திரும்ப வேண்டும்.
2. ஒரே பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலம் தேவ மன்னிப்பும் இரக்கமும் பெற வேண்டும்.
3. உங்கள் வாழ்வில் தேவ ஆளுகைக்கு இடம் கொடுக்க வேண்டும்.
4. வேதாகமத்தை படித்து தேவ சத்தியங்களை அறிய வாஞ்சையாயிருக்க வேண்டும்.
5. கிறிஸ்துவ விசுவாசிகளின் ஐக்கியத்தை நாட வேண்டும்.

இயேசு தேவ ஜனங்களைப் பார்த்து "பரலோக ராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சலக விதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. அது நிறைந்தபோது, அதை கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்து போடுவார்கள். இப்படியே உலகத்தின் முடிவில் நடக்கும். தேவ தூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவலிருந்து பொல்லாதவர்களை பிரித்து விடுவார்."

இயேசு கிறிஸ்துவின் தோழனும், சீடருமான மத்தேயு எழுதின சுவிசேஷம் 13:47-50 வரை எடுக்கப்பட்டது.

மேலும், இயேசு அவர்களை நோக்கி "தேவனுடைய ராஜ்யமானது, ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து; இரவில் தூங்கி, பகலில் விழித்திருக்க, அவனுக்கு தெரியாதவிதமாய், விதை முளைத்துப் பயிராகிறதற்கு ஒப்பாயிருக்கிறது. எப்படியென்றால் நிலமானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனாகத் தானாய்க் கொடுக்கும். பயிர் விளைந்து அறுப்புக்காலம் வந்தபோது அறுக்கிறதற்கு ஆட்களை அனுப்புகிறான்."

இக்குறிப்புகள் மாற்கு நற்செய்திநூல் 4:26-29 ல் எடுக்கப்பட்டது.

இந்த புத்தகத்தில் காணப்படும் சில வேதாகம மேற்கோள்கள்

**1. அப்போஸ்தலர் 1: 1-4**

1 பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.

2 அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.

3 அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.

4 அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.

**2. 1 கொரிந்தியர் 6: 19, 20**

19 உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும் நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா.

20 கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே. ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

**3. எபேசியர் 4 :30**

அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.

**4. எரேமியா 17: 13**

இஸ்ரவேலின் நம்பிக்கையாகிய கர்த்தாவே உம்மைவிட்டு விலகுகிற யாவரும் வெட்கப்படுவார்கள் அவர்கள் ஜீவனுள்ள தண்ணீரின் ஊற்றாகிய கர்த்தரை விட்டு விலகிப்போனபடியால்

உம்மைவிட்டு அகன்றுபோகிறவர்களின் பெயர் புழுதியில் எழுதப்படும்.

**யோவான் 4: 10-14**

10 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக நீ தேவனுடைய ஈவையும் தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால் நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய் அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்.

11 அதற்கு அந்த ஸ்திரீ ஆண்டவரே மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே கிணறும் ஆழமாயிருக்கிறதே பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்.

12 இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோடு அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்.

13 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக இந்தத்
தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும்
தாகமுண்டாகும்.
14 நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ
ஒருக்காலும் தாகமுண்டாகாது நான்
அவனுக்குக்கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே
நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்
என்றார்.

**5. யோவான்** 7: 37-39

37 பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே
இயேசு நின்று சத்தமிட்டு ஒருவன் தாகமாயிருந்தால்
என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன்.
38 வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில்
விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன்
உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்
என்றார்.
39 தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற
ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார். இயேசு இன்னும்

மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும்
அருளப்படவில்லை.

**6. வெளிப்படுத்தின விசேஷம்** 21: 6

6 அன்றியும் அவர் என்னை நோக்கி ஆயிற்று நான்
அல்பாவும் ஓமெகாவும் ஆதியும்
அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு
நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்.

**2 பேதுரு** 3: 9-13

9 தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர்
தமது வாக்குத்தத்தத்தைக்குறித்து தாமதமாயிராமல்
ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும்
மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய
பொறுமையுள்ளவராயிருக்கிறார்.
10 கர்த்தருடைய நாள் இரவிலே திருடன்
வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட
என்று அகன்றுபோம் பூதங்கள் வெந்து உருகிப்போம்
பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.
11 இப்படி இவைகளெல்லாம் அழிந்து
போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட
பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும்
உள்ளவர்களாயிருக்க வேண்டும்
12 தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த
ஆவலோடே காத்திருங்கள். அந்த நாளில் வானங்கள்
வெந்து அழிந்து பூதங்கள் எரிந்து உருகிப்போம்.
13 அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி
வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும்
உண்டாகுமென்று காத்திருக்கிறோம்.

**வெளிப்படுத்தின விசேஷம் 21:1**

1 பின்பு நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும்
கண்டேன் முந்தின வானமும் முந்தின பூமியும்
ஒழிந்துபோயின சமுத்திரமும் இல்லாமற்போயிற்று.

**7. யாத்திராகமம் 3:1-6**

1 மோசே மீதியான் தேசத்து ஆசாரியனாயிருந்த தன்
மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துவந்தான்.
அவன் ஆடுகளை வனாந்தரத்தின் பின்புறத்திலே ஓட்டி
தேவபர்வதமாகிய ஓரேப்மட்டும் வந்தான்.

2 அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின்
நடுவிலிருந்து உண்டான அக்கினிஜூவாலையிலே
நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன்
உற்றுப்பார்த்தான். முட்செடி அக்கினியால் ஜூவாலித்து
எரிந்தும் அது வெந்துபோகாமல் இருந்தது.
3 அப்பொழுது மோசே இந்த முட்செடி
வெந்துபோகாதிருக்கிறது என்ன நான் கிட்டப்போய் இந்த
அற்புதகாட்சியைப் பார்ப்பேன் என்றான்.
4 அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர்
கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை
நோக்கி மோசே மோசே என்று கூப்பிட்டார். அவன்
இதோ அடியேன் என்றான்.
5 அப்பொழுது அவர் இங்கே கிட்டிச்சேராயாக. உன்
கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு. நீ
நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார்.
6 பின்னும் அவர் நான் ஆபிரகாமின் தேவனும்
ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன்
பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார். மோசே
தேவனை நோக்கிப்பார்க்கப் பயந்ததினால் தன்
முகத்தை மூடிக்கொண்டான்.

**8. மத்தேயு 7:13,14**

13 இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்இ
கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் வழி
விசாலமுமாயிருக்கிறது அதின் வழியாய்ப்
பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.
14 ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி
நெருக்கமுமாயிருக்கிறதுஇ அதைக்
கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.

**யோவான்** 10:7-9

7 ஆதலால் இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி
நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
8 எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும்
கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள் ஆடுகள்
அவர்களுக்குச் செவி கொடுக்கவில்லை.
9 நானே வாசல் என் வழியாய் ஒருவன்
உட்பிரவேசித்தால்இ அவன் இரட்சிக்கப்படுவான் அவன்
உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக்
கண்டடைவான்.

**9. யோவான்** 3: 12, 13

12 பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச்
சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே
பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால்
எப்படி விசுவாசிப்பீர்கள்.
13 பரலோகத்திலிருந்திறங்கினவரும்
பரலோகத்திலிருக்கிறவருமான
மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன்
ஒருவனுமில்லை.

**யோவான்** 6: 38-40

38 என் சித்தத்தின்படியல்ல என்னை
அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான்
வானத்திலிருந்திறங்கிவந்தேன்.
39 அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான்
இழந்துபோகாமல் கடைசி நாளில் அவைகளை
எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின்
சித்தமாயிருக்கிறது.

40 குமாரனைக் கண்டு அவரிடத்தில்
விசுவாசமாயிருக்கிறவன் எவனோஇ அவன்
நித்தியஜீவனை அடைவதும் நான் அவனைக்
கடைசிநாளில் எழுப்புவதும் என்னை
அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்.

**மத்தேயு 13:34-35**

34 இவைகளையெல்லாம் இயேசு ஜனங்களோடே
உவமைகளாகப் பேசினார்இ உவமைகளினாலேயன்றிஇ
அவர்களோடே பேசவில்லை.
35 என் வாயை உவமைகளினால் திறப்பேன்இ
உலகத்தோற்றமுதல் மறைபொருளானவைகளை
வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால்
உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

**10. யோவான் 6:46**

46 தேவனிடத்தினின்று வந்தவரே தவிர வேறொருவரும்
பிதாவைக் கண்டதில்லை இவரே பிதாவைக் கண்டவர்.

**யோவான் 14: 7-11**

7 என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும்
அறிந்திருப்பீர்கள்இ இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும்
அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார்.
8 பிலிப்பு அவரை நோக்கி ஆண்டவரே பிதாவை
எங்களுக்குக் காண்பியும் அது எங்களுக்குப் போதும்
என்றான்.
9 அதற்கு இயேசு பிலிப்புவே இவ்வளவுகாலம் நான்
உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை
அறியவில்லையா என்னைக் கண்டவன் பிதாவைக்

கண்டான் அப்படியிருக்க பிதாவை எங்களுக்குக்
காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்
10 நான் பிதாவிலும்இ பிதா என்னிலும் இருக்கிறதை நீ
விசுவாசிக்கிறதில்லையா நான் உங்களுடனே
சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச்
சொல்லவில்லை என்னிடத்தில் வாசமாயிருக்கிற
பிதாவானவரே இந்தக் கிரியைகளைச்
செய்துவருகிறார்.
11 நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை
நம்புங்கள் அப்படியில்லாவிட்டாலும் என்
கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்.

**11. யோவான்** 3: 12, 13

12 பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச்
சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே
பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால்
எப்படி விசுவாசிப்பீர்கள்
13 பரலோகத்திலிருந்திறங்கினவரும்
பரலோகத்திலிருக்கிறவருமான
மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன்
ஒருவனுமில்லை.

**12. வெளிப்படுத்தின விசேஷம்** 22: 12-16

12 இதோ சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுடைய
கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன்
என்னோடேகூட வருகிறது.
13 நான் அல்பாவும் ஓமெகாவும் ஆதியும் அந்தமும்
முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்.

14 ஜீவவிருட்சத்தின்மேல்
அதிகாரமுள்ளவர்களாவதற்கும் வாசல்கள் வழியாய்
நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய
கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.
15 நாய்களும் சூனியக்காரரும் விபசாரக்காரரும்
கொலைபாதகரும் விக்கிரகாராதனைக்காரரும்
பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும்
புறம்பே இருப்பார்கள்.
16 சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக
அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை
அனுப்பினேன். நான் தாவீதின் வேரும் சந்ததியும்
பிரகாசமுள்ள விடிவெள்ளி
நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்றார்.

**13. வெளிப்படுத்தின விசேஷம்** 21: 5-6

5 சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர் இதோ நான்
சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார். பின்னும் அவர்
இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள்
இவைகளை எழுது என்றார்.
6 அன்றியும் அவர் என்னை நோக்கி ஆயிற்று நான்
அல்பாவும் ஓமெகாவும் ஆதியும்
அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு
நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்.

**14. மத்தேயு** 19: 28

28 அதற்கு இயேசு மறுஜென்மகாலத்திலே
மனுஷகுமாரன் தம்முடைய மகிமையுள்ள
சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கும் போது என்னைப்
பின்பற்றின நீங்களும் இஸ்ரவேலின் பன்னிரண்டு
கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாகப்

பன்னிரண்டு சிங்காசனங்களின்மேல் வீற்றிருப்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

**15. மத்தேயு** 12: 48-50

48 தம்மிடத்தில் இப்படிச் சொன்னவனுக்கு அவர் பிரதியுத்தரமாக என் தாயார் யார் என் சகோதரர் யார் என்று சொல்லி .
49 தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி இதோஇ என் தாயும் என் சகோதரரும் இவர்களே.
50 பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோஇ அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்.

**16. வெளிப்படுத்தின விசேஷம்** 21: 6

6 அன்றியும் அவர் என்னை நோக்கி ஆயிற்றுஇ நான் அல்பாவும் ஓமெகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்.

**வெளிப்படுத்தின விசேஷம்** 22: 17

17 ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள் கேட்கிறவனும் வா என்பானாக தாகமாயிருக்கிறவன் வரக்கடவன் விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்.

**17. யோவான்** 4: 11-14

11 அதற்கு அந்த ஸ்திரீ ஆண்டவரே மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே கிணறும் ஆழமாயிருக்கிறதே பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்.

12 இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய
பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும் நீர் பெரியவரோ
அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும்
இதிலே குடித்ததுண்டே என்றாள்.
13 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக இந்தத்
தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும்
தாகமுண்டாகும்.
14 நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ
ஒருக்காலும் தாகமுண்டாகாது நான்
அவனுக்குக்கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே
நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்
என்றார்.

**யோவான்** 7: 37-38

37 பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே
இயேசு நின்றுஇ சத்தமிட்டு ஒருவன் தாகமாயிருந்தால்
என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன்.
38 வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில்
விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன்
உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்
என்றார்.

**18. யோவான்** 8: 58

58 அதற்கு இயேசு ஆபிரகாம் உண்டாகிறதற்கு
முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

**19. யோவான்** 10: 30

30 நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்.

**20. யோவான்** 14: 7-12

7 என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும்
அறிந்திருப்பீர்கள் இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும்
அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார்.
8 பிலிப்பு அவரை நோக்கி ஆண்டவரே பிதாவை
எங்களுக்குக் காண்பியும் அது எங்களுக்குப் போதும்
என்றான்.
9 அதற்கு இயேசு பிலிப்புவே இவ்வளவுகாலம் நான்
உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை
அறியவில்லையா என்னைக் கண்டவன் பிதாவைக்
கண்டான் அப்படியிருக்க பிதாவை எங்களுக்குக்
காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்.
10 நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நீ
விசுவாசிக்கிறதில்லையா நான் உங்களுடனே
சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச்
சொல்லவில்லை என்னிடத்தில் வாசமாயிருக்கிற
பிதாவானவரே இந்தக் கிரியைகளைச்
செய்துவருகிறார்.
11 நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை
நம்புங்கள் அப்படியில்லாவிட்டாலும் என்
கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்.
12 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன் நான் என் பிதாவினிடத்திற்குப்
போகிறபடியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான்
செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்
இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும்
செய்வான்.

**21, 22. யோவான்** 14: 6

6 அதற்கு இயேசு நானே வழியும் சத்தியமும்
ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல்
ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

**23. யோவான்** 10: 7-9

7 ஆதலால் இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி
நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.
8 எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும்
கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள் ஆடுகள்
அவர்களுக்குச் செவி கொடுக்கவில்லை.
9 நானே வாசல் என் வழியாய் ஒருவன்
உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான் அவன்
உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக்
கண்டடைவான்.

**24, 25. யோவான் 8: 12**

12 மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி நான்
உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்னைப்
பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவஒளியை
அடைந்திருப்பான் என்றார்.

முக்கியமாக நினைவில் வைக்க வேண்டியவைகள்

1. ஜெபத்தின் மூலம் தேவனோடு பேசுகிறோம்.
2. பரிசுத்த வேதாகம வசனத்தின் மூலம் தேவன் நம்மோடு பேசுகிறார்.

நேரம் கிடைக்கின்ற பொழுதெல்லாம் வேதாகமத்தை எடுத்து தேவனின் வார்த்தையாகிய வசனங்களை படிக்க வேண்டும்!!

நீங்கள் வாழ்கின்ற உலகத்தில் காணப்படும் சகல வித குழப்பங்களிலிருந்து விடுதலை பெற்று நீங்கள் எடுக்கும் சகல முயற்சிகளையும் தேவன் ஆசீர்வதிப்பார்.

அவருடைய கிருபை, மன்னிப்பு மற்றும் தெய்வீக தன்மை அடைய தேவன் உங்களை ஆசீர்வதிப்பதாக!

சர்வவல்லமையுள்ள யெகோவாவும், இஸ்ரவேலின் திரியேக தேவனும் உங்களை தமது ஒரு பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலம் ஆசீர்வதிப்பாராக அவரே மேசியாவும் , யெஷீவாவும், விரைவில் வரப்போகும்

உலகத்தின். ராஜா அவரே உங்களுக்கு கிருபையின் மன்னிப்பும் அறிவொளியும் அருள்வாராக.

கஷ்டமும் குழப்பமும் நிறைந்த இந்த உலகை புரிந்துகொள்ள நாம்படும் பிரயாசங்களுக்காக திரியேக தேவன் நம்மை ஆசீர்வதிக்க விரும்புகிறார். வரப்போகும் கோபாக்கினை நாட்களுக்கும் நம்மை விடுவிக்க அவர் விரும்புகிறாார். அவர் உங்களின் நீண்ட தேடல்களுக்கு தம்முடைய கிருபையின் மன்னிப்பையும் ஞானத்தையும் வெகுமதியாக அருள்வாராக.

அவரது நியாயதீர்ப்பு வருமுன் இன்று நல்ல உணர்வு காட்டுவது நல்லது. இது உங்களின் நித்திய வாழ்வு குறித்த வருத்தத்திற்க்கு முடிவு தெரிவிக்கும்.

ஜீவனும் மரணமும் நம்முன் வைக்கப்பட்டு இருக்கின்றது. வேதாகமம் சொல்கிறது என்னை வெறுப்பவர்கள் மரணத்தை நேசிக்கிறார்கள். ஆகவே

இருளின் இளவரசன் என்றழைக்கப்படும் நித்திய இருளை தேர்ந்தெடுப்பதை விட நித்திய வாழ்வை அளிக்கும் இயேசு கிறிஸ்துவையும் பிதாவையும் தேர்ந்தெடுப்போம். ஏன் என்றால் தேவன் எச்சரித்தது போலவே சாத்தான் என்பவன் பொய்யின் பிதாவும், கொலைகாரன்.

எனவே கிறிஸ்துவில் புதிய வாழ்வை தேர்வு செய்வோம், அது சாத்தானின் அகல பாதையான கொடிய நரகம் அல்ல அது பரலோகம் செல்லும் குறுகிய பாதை.

தேவ ஞானத்தையும், நீதியையும், பரிசுத்ததையும் தேவ குமாரனுடைய தெய்வீக தன்மையும் நாம் ஏற்றுக்கொள்வோம். அதுவே நம் பாவங்களை களையச்செய்யும். நம் பாவங்கள் அனைத்தும் நமக்காக

பலியான ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுத்திகரிக்கப்படும்.

ஆகவே சுய அழிவை உண்டாக்கும் பொய்யனின் பேச்சை பார்க்கிலும் அன்பின் தேவன் யெகோவாவின் வழியை தேர்வு செய்வோம். அதுவே வாழ்க்கைக்கு வளர்ச்சி.

**<u>முக்கிய முடிவு குறிப்பு :</u>**

ஒரு புதிய இருண்ட காலம் நம் உலகத்திற்கு வருகிறதா?

இது பிரிட்டன் ஐரோப்பா, ஆஸ்திரேலியா தென் ஆப்பிரிக்கா, இந்தியா, அமெரிக்கா, போன்ற நாடுகளிலும், தற்போது வெளிப்படையாக காணப்படுகின்றன. கிறிஸ்தவர்களுக்கு எதிரான துன்புறுத்தல்கள், சபை மக்கள் குறைவு, மட்டுமின்றி இஸ்லாமியம், மார்க்சிசம், மனிதநேய பரிணாமம், மதச்சார்பின்மை, சாத்தானியவாதம் மற்றும் விஞ்ஞானம் ஆகியவற்றின் தொடர்சியான எழுச்சியும் ஓர் உதாரணம். ஐரோப்பியா ஏற்கனவே புதிய

இருண்ட கண்டமாக தயாராகி கொண்டிருக்கிறது. அநேகரின் நம்பிக்கை என்னவென்றால் இஸ்லாமியக் கட்டுப்பாட்டின் கீழ் இது ஒரு இருண்ட யூரபியா என்று நம்புகிறார்கள்.

இஸ்ரவேல் மற்றும் யூதாவின் பழங்கால நாடுகள் மிக மோசமான மன்னனால் அழிக்கப்பட்ட போதெல்லாம், எப்பொழுதும் அது தெளிவான அறிகுறியாக இருந்தது, யெகோவா தேவனின் நியாயதீர்ப்பு யூதர்கள் மேல் வந்துவிட்டது என்று. இஸ்ரவேல் தேசத்தின் பாவமும் , ஒழுக்கமின்மையும் தான் நியாயதீர்ப்பு வர காரணம், மோசமான மன்னர்களின் காலத்தின் தான் இஸ்ரவேல் தேசத்திற்க்கு வறுமை, பேரழிவு, அடிமைத்தனம் போன்ற எச்சரிப்பு கடவுளிடம் இருந்து தீர்க்கதரிசிகள் மூலம் வெளிப்பட்டது.

இந்த யூதா மற்றும் இஸ்ரவேல் இராஜாக்கள் வரப்போகும் எதிர்கால அந்திகிறிஸ்தவின் ஒரு

அடையாளம். எனவே நீங்கள் இதை எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு விரைவில் உங்கள் சொந்த நாட்டிற்க்கு சந்தேகத்திற்கு இடமின்றி நடைபெற போகும் சம்பவங்களுக்கு தயார் செய்ய முயற்சி செய்யுங்கள்.

அதேபோல் உங்கள் சொந்த நாட்டை பற்றி கொள்ள ஒரு சர்வாதிகாரக் கொடுங்கோலன் முயற்சி செய்யும் போதும் தான் பூமியின் நிலங்கள் அனைத்துக்கும் ராஜாவாக அகிவிடலாம் என்று நினைக்கும் போது இது கடவுளின் நியாயதீர்ப்பு சகல தேசத்தின் மீது வந்துவிட்டது என்று வெளிப்படுத்துகிறது.

தற்போது நாம் உலகத்தின் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சபையும் முடிவின் காலத்திற்க்கு வந்துவிட்டது. மேலும் சுதந்திரம் பெற்ற இந்தியா, இலங்கை, அமெரிக்கா போன்ற தேசங்களுக்கு கடைசி நாட்கள் என்றும் நாம் காணலாம். எனவே இந்தியாவே கடைசி நாட்களை பயன்படுத்தி கொள் . உனக்கு இருக்கும் சில மத சுதந்திரத்தை பயன்படுத்திகொள் இல்லையெனில் அதை இழக்க நேரிடும். இன்று மனந்திரும்பு , முழங்காலில் நின்று ஜெபம் செய் யெகோவா தேவன் இந்தியா மற்றும் இலங்கை தேசத்தை காப்பாராக.

இயேசு கிறிஸ்து அடுத்து முறை வரும் போது அது வித்தியாசமாக இருக்கும். அவர் யூதாவின் சிங்கமாக, பூமியின் நியாயாதிபதியாக, உலகை வென்ற இராஜாவாக வருவார். அவர் அந்தி கிறிஸ்துவை நீக்கி பூமியின் மீது தனது சிங்காசனத்தை நிலை நிறுத்துவார்.

**யெகோவா தேவன் ஒரு பொறுமையான விவசாயி மட்டுமின்றி ஒரு நல்ல தகப்பன்.**
**இவர் மனுஷகுமாரனும் தன் சொந்த குமாரனுகிய இயேசு கிறிஸ்து மூலம் செயல்படுகின்றார்.**

**பூமிக்கு வருவதை தொடர்ந்து அவர் அறுவடை செய்யவும் பூமியின் பரப்புக்கு அவரது நீண்ட தூரத் திட்டம் எப்போதும் முன்னோக்கி செல்கிறது.**

இந்த வேதாகம துணை நூலை எழுதியவர் &

Copyright 2011, 2018 by Mr. Roddy Kenneth Street, Jr. (USA)
Mr. Ken Street invites you to send letters (English only) to him through
E-mail: etracts@yahoo.com and etracts@gmail.com

மொழி பெயர்த்தவர்

**மறைந்திரு அறிவர் . ப. செல்லதுரை**

Contact in India (Tamil Nadu): Pastor Paul Phinehas
Phone: 04259 222115, Cell phone: 9944162115
E-mail: paulphinehas@gmail.com and
gilgalmissionoffice@gmail.com

தேவன் பூமியை அறுவடையால் நிறைத்து கொண்டே இருக்கிறார்...

அவருடைய கோபம் மறுரூபமாய் மாறி
கடந்து போகும் வரை இது தொடரும்...



This is one of many Street Tracts at
JesusChristIndia.org, JesusChristNepal.org, JesusChristKorea.org,
JesusChristChina.org, JesusChristSrkLanka.org,
JesusChristBurma.org, JesusChristJapan.org, JesusChristUSA.org,
JesusChristSouthKorea.com, JesusChristSouthIndia.com,
JesusChristTaiwan.org, JesusChristIsrael.org, and other sites via
our Jesus Information Network — including, of course...
JesusChristChina.net and JesusInformation.net !

Visit these websites for free e-tracts, printing patterns & more good stuff !

இலவச வேத பாட நூல் கிடைக்கும்

E-mail for Mr. Ken Street: etracts@yahoo.com or etracts@gmail.com
(in English only, please; he is not bi-lingual)
E-mail for Tamil-language letters: paulphinehas@gmail.com
Translation Head: Rev. PAUL PHINEHAS

Publisher in Tamil
**GILGAL MISSION & MINISTRIES**
NO.1 SUNDRAM LAY-OUT, NETHAJI ROAD, POLLACHI – 642 001
COIMBATORE, TAMIL NADU, INDIA


*Above, you can see the face of my trekking-pal Werner, as he looked in November 1979 while on the Muktinath Trek.*

மேலே, நீங்கள் பார்க்கிறீர்கள் முக்திநாத் மலை ஏறும் போது நவம்பர் 1979 இல் என் நண்பர் வெர்னரின் முகத்தைக் காணலாம்.

THIS GUIDE WAS WRITTEN FOR YOU BY. . .
Ken Street, a baptized follower of Jesus and His Way.

English version 3j, 2/17/2011 © 2011, 2018 by Roddy Kenneth Street, Jr.
Tamil translation 2/27/2018 by Pastor Paul Phinehas of Pollachi,
Tamil Nadu, India

இந்தியா ஞானத்திற்காக திரித்துவ கடவுளை பிரார்த்திக்க வேண்டும்----

தீய கொடுங்கோலன் உங்களை ஆட்சி செய்யக்கூடாது ----

நீங்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்படுவீர்கள், அல்லது நீங்கள் விதைத்ததை அறுப்பீர்கள்,

இயேசுவுக்கு சமமான ராஜா இல்லை, இயேசு மட்டுமே சிம்மாசனத்திற்கு தகுதியானவர்.

இயேசு இல்லை என்றால் உங்கள் போர் வலி நிறைந்ததாக இருக்கும்----

நீங்கள் உயர்வாக வாழும் வரை இது உங்கள் உறுதிமொழியாக இருக்க வேண்டும்.

**யெகோவா தேவன் ஒரு பொறுமையான விவசாயி மட்டுமின்றி ஒரு நல்ல தகப்பன். இவர் மனுஷகுமாரனும் தன் சொந்த குமாரனுகிய இயேசு கிறிஸ்து மூலம் செயல்படுகின்றார்.**

**பூமிக்கு வருவதை தொடர்ந்து அவர் அறுவடை செய்யவும் பூமியின் பரப்புக்கு அவரது நீண்ட தூரத் திட்டம் எப்போதும் முன்னோக்கி செல்கிறது.**